# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 28 வியாழக்கிழமை 14.09.2023 கதிர் 307


# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் திருத்திய வடிவம் சில தினங்களில்

## வர்த்தமானியில் வெளியிடப்படும் அமைச்சர் அலி சப்ரி அறிவிப்பு

**தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில், சர்வதேச அளவுகோல்களின்படி தயாரிக்கப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் எதிர்வரும் சில தினங்களில் வர்த்தமானியில் வெளியிடப்படுமென வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.**

**ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும்** ☞2



## இது ரகசியம் அல்ல!

இந்திய-இலங்கை மீனவர்கள் பிரச்சினை அரசியல் ரீதியாக மாறி மாறி பந்தாடப்பட்டு சுயலாப அரசியலால் சிதைக்கப்படுகின்றதோ என்கிற எண்ணம் ஏற்படுகின்றது.

எல்லை தாண்டிய மீன்பிடி என்பது இலங்கை, இந்தியா ஆகிய இருநாடுகளுக்கும் இடையிலான நீண்ட காலப் பிரச்சினை. போர்க் காலத்திலும் இந்தப் பிரச்சினை இருந்தது. அப்போது போரைக் காரணம் காட்டி இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவங்கள் பலவும் இடம்பெற்றுள்ளன. போர் முடிந்த பின்னர் இந்தப் பிரச்சினை இன்னும் தீவிரமாகி இருக்கின்றது. அதற்கு இரு காரணங்கள் உண்டு. எமது மீனவர்கள் பெரிய படகுகளில் நீண்ட தூரம் சென்று மீன்பிடிப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டிருப்பது ஒன்று, இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் ஊடுருவும் தூரம் மிக அதிகமாகி இருப்பது மற்றொன்று. இதனால் இரு நாட்டு மீனவர்களும் நேரடியாக மோதிக்கொள்ளும் ☞2

## 17 இந்திய மீனவர் கடலில் கைது

(ந.லோகதயாளன்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி உள் நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 3 இந்தியப் படகுகளுடன் 17 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி உளநுழைந்தனர் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நேற்று இரவு கைது செய்யப்பட்டு இன்று அதிகாலை காங்கேசன்துறைக்கு கொண்டுவரப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 3 படகுகளில் ☞2

## சட்டமூல நகலைக் கோருகின்றது மனித உரிமைகள் ஆணைக்குழு

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக அதன் நகல்வடிவை சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கோரியுள்ளது.

சமீபத்தில் அமைச்சரவை அனுமதி வழங்கிய சட்ட மூலத்தின் நகல்வடிவையே ஆணைக்குழு கோரியுள்ளது.

2023 மார்ச் 17 வர்த்தமானியில் வெளியான சட்டமூலத்தின் திருத்தப்பட்ட பதிப்பே தற்போதைய சட்டமூலமென கருதுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மார்ச் மாதம் வெளியான சட்டமூலம் குறித்த தனது அவதானிப்புகளை மனித உரிமை ஆணைக்குழு வெளியிட்டிருந்த நிலையில் தற்போதைய சட்டமூலத்தின் நகல் கிடைத்ததும் அதனை ஆராய்ந்த பின்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது கருத்துக்களை அவதானிப்புகளை முன்வைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பத்தரமுல்லையில் நேற்று அரச எதிர்ப்பு போராட்டம்

சமுர்த்தி ஊழியர்கள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியை பாதுகாக்கும் குழுவினர் நேற்றைய தினம் பத்தரமுல்லையில் உள்ள செத்சிறிபாய வளாகத்துக்கு முன்னால் பெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மதிப்பளித்தல், ஊழியர் சேமாலாப நிதி, ஊழியர் நம்பிக்கைநிதி ஆகியவற்றைத் திருடிச்செல்வதை நிறுத்துதல் ஊழியர் பாதுகாப்பை உறுதி செய்தல், ஆட்சேர்ப்பு முறையை உடனடியாக அமலாக்குதல் சமுர்த்திக் கொடுப்பினை இல்லாமல் செய்யும் இந்த ஆட்சியின் முயற்சிகளைத் தோற்கடித்தல் ஆகிய விடயங்களைமையப்படுத்திய தொனிப்பொருளில் குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பெருமளவிலான பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் போராட்ட இடத்தில் குவிக்கப்பட்டிருந்தனர். நீர்த்தாரைத் தாக்குதல் வாகனங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. எனினும், போராட்டக்காரர்கள் அமைதியான முறையில் தமது கண்டப் போராட்டத்தினை முன்னெடுத்துவிட்டுக் கலைந்து சென்றிருந்தனர்.

போராட்டம் தொடர்பில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பொதுச் ☞2

## இலங்கையில் முதலிட இந்தியா மேலும் ஆர்வம்

இலங்கையில் இந்திய முதலீட்டை மேலும் ஊக்குவிக்க இந்திய வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறை தொழில் முயற்சியாளர்கள் ஆர்வமாக உள்ளதாக இலங்கை இந்திய சங்கத்தின் உறுப்பினர்கள் பிரதமர் தினேஷ் குனவர்தனவிடம் உறுதியளித்துள்ளனர்.

இலங்கை இந்திய சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றதுடன், வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட இருதரப்பு பொருளாதார உறவுகளை ☞2

## முதல்வர் மம்தாவை சந்தித்தார் ரணில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவின் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜியை சந்தித்துள்ளார். ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் நேற்றுக் காலை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சந்திப்பின் போது மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மேற்கு வங்கத்துக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு முதலமைச்சர் மம்தா பானர்ஜி ஓவியம் ஒன்றையும் பரிசாக வழங்கியுள்ளார்.

## தொடருந்து ஓட்டுநர்களின் பணி நிறுத்தம் தொடரும்

தொடருந்து சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதிலும், இலங்கை தொடருந்து இயந்திர இயக்க பொறியியலாளர்கள் சங்கம் தொடர்ந்தும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் எஸ்.ஆர்.சி.எம். சேனநாயக்க தெரிவித்தார்.

தொடருந்து இயந்திர செலுத்துனர்கள் உடனடியாக பணிக்குத் திரும்பாவிட்டால் அவர்கள் வேலையிலிருந்து விலகியவர்களாகக் கருதப்படுவர் என்று ஆளும் தரப்பு மிரட்டியுள்ள பின்னணியிலேயே போராட்டம் தொடரும் என்ற இந்த அறிவிப்பும் வந்துள்ளது.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடருந்து ☞2

## கோட்டாவின் அரசியல் மீள்நுழைவை எள்ளிநகையாடும் பொது ஜன பெரமுன

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ மீண்டும் அரசியலுக்குள் பிரவேசிப்பது நகைப்புக்குரிய விடயம் என்று பொதுஜன பெரமுனவினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

பாத்திரமுல்லவில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று செய்தியாள்களைச் சந்தித்த போது முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக் ஷ புதிய கட்சியொன்றுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

69 இலட்சம் பேர் அவருக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக அரியாசனத்தில் அமரவைத்தார்கள். அதனை முறையாக முன்னெடுக்க முடியாமல் இடை நடுவில் பதவியை கைவிட்டு நாட்டை விட்டுத் தப்பி ஓடினார். அவர் மீண்டும் அரசியலுக்கு வருவது மிகவும் ☞2

## மிரட்டுகிறது ஆளும் தரப்பு இராணுவமும் அழைப்பு

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள 84 தொடருந்து இயந்திர ஓட்டுநர்களையும் உடனடியாக கடமைக்கு சமூகமளிக்குமாறும், தவறினால், பதவியில் இருந்து விலகியதாக கருதப்படுமென தொடருந்துத் திணைக்களத்தால் அவசர கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஆட்சேர்ப்பு நடைமுறையில் திருத்தம், பதவி உயர்வு உள்ளிட்ட பல முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தொடருந்து இயந்திர இயக்க பொறியியலாளர் சங்கம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வேலைநிறுத்தம் காரணமாக 128க்கும் மேற்பட்ட ரயில் பயணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, நாட்டின் தொடருந்து நிலையங்களில் பாதுகாப்பு கடமைகளுக்காக இராணுவத்தினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

சவால்களுக்கு ☞2

## கெஹலியவை பதவி விலக கோரி அமைச்சின் முன் சத்தியாக்கிரகம்



சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அமைச்சு செயலாளர் ஜானக்க ஸ்ரீ சந்திரகுப்த மற்றும் பணிப்பாளர் அசேல குணவர்தன ஆகியோரைப் பதவி விலகுமாறு கோரி சத்தியாக்கிரகப் போராட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது.

குறித்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை இலஞ்ச ஊழல் மற்றும் வீண் விரயத்திற்கு எதிரான சிவில் சமூக ஆர்வலர்கள் குழுவொன்று நேற்று சுகாதார அமைச்சுக்கு முன்பாகத் தொடங்கியுள்ளது.

சுகாதாரத்துறையில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படாமை, அந்தப் பிரச்சினைகளை மேலும் வளர்த்தெடுத்துச் செல்வது ஆகியன இவர்கள் செய்யும் சதி என்று சத்தியாக்கிரகத்தில் இணைந்துள்ளவர்கள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களாகும்.




காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

நிலமை ஏற்படுமளவிற்கு பிரச்சினையின் தீவிரம் அதிகரித்துள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக இந்திய மீனவர்கள் இலங்கைக்கடல்எல்லைக்குள் மீன்பிடிப்பதற்குப்பணத்தைப் பெற்றுக்கொண்டுஅனுமதிய ளிப்பது தொடர்பாகப் பரிசீலிக் கப்படுகின்றது என்று அயலு றவுத்துறை அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றத்தில் ஒரு தடவை தெரிவித்தார். அதற்கு வடக்கு கிழக்கில் மீனவர்கள் மத்தியில் எழுந்த கடும் எதிர்ப்பையடுத்து அந்தத் திட்டம் இப்போதைக்குக் கிடப்பில் போடப்பட்டிருப்பது போன்று தோன்றுகின்றது.

இலங்கைக்கும்இந்தியாவுக் கும் இடையிலான பாக்கு நீரிணை மிகக் குறுகியது. ஒரு நாட்டிற்குரிய கடல் எல்லையென வரையறுக் கப்பட்டிருக்கும் தூரத் தையும்விடமிகக்குறைவான நீளம்கொண்டதுஇந்தப்பகுதி. அதனால்இருநாடுகளுக்கும் இடையிலானஒருகற்பனைப் பிரிகோடே இந்தப் பகுதியில் கடல் எல்லையாகக் கொள்ளப்படுகின்றது. கச்ச தீவுஒப்பந்தத்திற்குமுன்னராக இரு நாட்டு மீனவர்களும் இந்தக்கற்பனைப்பிரிகோட்டு எல்லைக்கு அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் மீன்பிடியில் ஈடுபட்டு வந்தனர். ஆனால் அப்போதுஇன்றிருக்கக்கூடிய மீன்பிடிப்படகுகளோமீன்பிடி முறைகளோஇருக்கவில்லை. அதனால் பிரச்சினைகள் அதிகமாக இருக்கவில்லை.

ஆனால், இழுவை மடி கடற்றொழில்முறைஅறிமுகப் படுத்தப்பட்டுதீவிரமாகியதன் பின்னர் இதுவொரு பெரும் பிரச்சினையாக மாறிவிட்டது. ஏனெனில் இந்த இழுவைமடியால் பாக்கு நீரிணையின் இந்தியக் கடல்பகுதியில் மீன்வளம் குன்றிவிட்டது. அதனால் அவர்கள் மீனைத் தேடி இலங்கைக் கடல் எல்லைக்குள், இலங்கைக் கரைகளிலிருந்து மிக நெருக் கமாக வந்து மீன்பிடிக் கிறார்கள். பெரும் இழுவைப் படகுகளில் வரும் இந்திய மீனவர்களால் எமது கடல் வளம் பாதிக்கப்படுவது மட்டுமன்றி தமது வலைகள், படகுகள் போன்ற மீன்பிடி உபகரணங்களையும்கடலில் இழக்கவேண்டியிருக்கின்றது என்பதேஎமதுமீனவர்களின் பிரச்சினையாகஇருக்கின்றது.

தீராத இந்தப் பிரச்சினை யைக்கொஞ்சக்காலம்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது கையில் எடுத்து போராட்டங்கள், ஆர்ப்பாட் டங்கள்என்றுநடத்திக்கொண் டிருந்தனர். படகுகளில் யாழ்ப்பாணத்திற்குஊர்வலம் எல்லாம்நடத்தினர். பின்னர் இந்தப் பிரச்சினையில் கூட்டமைப்பின்நேரடிஆர்வம் மெல்லக்காணாமல்போனது. இப்போது இன்னொருதரப்பு இந்தப் பிரச்சினையைக் கையில் எடுத்திருக்கின்றது. படகுகளில் சென்று இந்திய ஆட்சியாளர்களுடன் பேசப் போவதாகவும் அது தடுக்கப்பட்டால்விமானத்தில் சென்று அந்த முயற்சியில் ஈடுபடுவதற்காக உண்டியல் குலுக்கிபணம்சேர்ப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

மீனவர்கள்இப்படிச்செய்யப் போகிறார்கள்என்றுதனக்குத் தகவல் கிடைத்திருப்பதாக செவ்வாய்க்கிழமையாழ்ப்பா ணத்தில்செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார் மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா. அப்படிச் செல்ல இருப்பவர்கள் அவரது கட்சி உறுப்பினர்களாக இருக்கும் மீனவர்கள்தானே தவிரஉண்மையானமீனவர் சங்கப் பிரதிநிதிகள் அல்லர் என்று ஒரு குற்றச்சாட்டும் உள்ளது.

இதனால், இப்படிப் படகு களில் சென்றோ அல்லது விமானத்தில் சென்றோ மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் பேச்சு நடத்தப்ப டுவதாக இருந்தால் உண் மையான மீனவர் சங்கப் பிரதிநிதிகளான தம்மை யும் அதில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்திடம் கோரிக்கை விடுப்பதற்கு மீனவர் சங்கங்கள் பலவும் தயாராகி வருகின்றன.

மீனவர்கள்என்கிறபெயரில் தமது கட்சியினர் மற்றும் கட்சி ஆதரவாளர்களை இந்தியாவுக்கு அனுப்பி அமைச்சர் பேச்சு நடத்த எடுக்கும் இந்த முயற்சி சாத்தியமானால், அத்தகைய எந்தவொரு பேச்சிலும் உண்மையான மீனவர் சங்கத்தினரான தம்மையும் சேர்த்துக்கொள்ளவேண்டும், அப்போதுதான் இந்தப் பிரச்சினைக்குத்தீர்வுகிட்டும் என்றுஇந்தியத்தூதரகத்திடம் அடுத்து வரும் நாட்களில் நேரில்வலியுறுத்துவதுஎன்று இந்த மீனவர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

இந்தியமீனவர்கள்எல்லை தாண்டுகிறார்கள்,அவர்களின் இழுவைமடி மீன்பிடி முறை யால்இலங்கைக்கடல்வளம் அழிகின்றது என்பதெல் லாம் சரி. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும், தடுத்து நிறுத்தவேண்டும் என்பதும் சரி. அதற்கு முன்னதாக வடக்கு கிழக்கில் நடக்கும் அதே இழுவைமடி முறையி லான மீன்பிடியை தடுத்து நிறுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கின்றது? வடக்கு கிழக்கில் கடந்த 10 ஆண்டு களில் இழுவை மடி படகு களின் எண்ணிக்கை பல்கிப் பெருகியிருக்கின்றது. இத்தனைக்கும்இந்தமீன்பிடி முறை தண்டனைக்குரிய குற்றம் என்று சட்டம் இயற்றப்பட்ட பின்னரும் எந்தத் தடையும் இன்றித் தொடர்ந்து நடக்கின்றது.

மாதம் 60 ஆயிரம் ரூபா கப்பம் கட்டினால் சரி, எந்தத் தடையும்இன்றிஇழுவைமடி மீன்பிடியில் ஈடுபடலாம் என்கிறார்கள் இங்குள்ள மீனவர்கள். ஆக, முதலில் இந்தக் கப்பம் யாருக்குச் செலுத்தப்படுகின்றது என்பதைக் கண்டுபிடித்து இழுவைமடி மீன்பிடியை இங்கு தடை செய்துவிட்டு எல்லைதாண்டிச்செல்வதே பொருத்தமாக இருக்கும். மீன்பிடித்துறைஅமைச்சரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரும் இது தொடர்பில் விசாரித்து கப்பம் யாருக்குச் செலுத்தப் படுகின்றது, யாரால் இந்த இழுவைமடி மீன்பிடி அனுமதிக்கப்படுகிறது, இதற்கெதிராக அதிகாரிகள் ஏன் நடவடிக்கை எடுப்ப தில்லை, இழுவைமடி தடை செய்யப்பட்டுள்ள நிலையிலும் இழுவை மடிக் கலங்கள் ஏன் தொடர்ந்தும் வடக்கு கிழக்கில் பதிவு செய்யப்படுகின்றன,இதனால் யார் லாபமடைகின்றார்கள் என்றெல்லாம் விரிவான விசாரணை நடத்தி உண் மைகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அவற்றை மக்களுக்கும் பகிரங்கப் படுத்தவும் வேண்டும்.

அதற்கும் மேலே எல்லை தாண்டுவது சட்டவிரோதம் என்ற பின்னர் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதே ஆட்சியாளர்களின் கடமை, அதைச் செய்வதை விடுத்து அப்பாவிமீனவர்களைஇந்தப் பிரச்சினையில்இழுத்துவிட்டு வேடிக்கை பார்ப்பதும் அரசியல் செய்வதும் வேண்டத்தகாதவை என்றேஎனக்குப்படுகின்றது. கடந்த பத்தாண்டுகளில் பல தடவைகள்இப்படிமீனவர்கள் நேரில் பேசியும் இந்தப் பிரச்சினைக்கு எந்தவொரு முடிவும் எட்டப்படவில்லை. இரு நாட்டு அரசுகளும் தமது பொறுப்புக்களைத் தட்டிக்கழித்து அரசியல் லாபத்திற்காகவேமீனவர்கள் பேசினால் பிரச்சினை தீரும் என்று கதைவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்என்றே எனக்குப்படுகின்றது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வாசகர்களே! உங்கள் கருத் தையும் என் உள்பெட்டிக்கு அனுப்பிவிடுங்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கோட்டாவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேடிக்கையான விடயமாக உள்ளது.

அவர் மக்கள் மீது வன் முறைகளை ஏவி விடாது அமைதியாக ஆட்சி அதிகா ரத்தை ஒப்படைத்து விட்டு வெளியேறியாமை சம்பந்த மாக எமக்கு அவர் மீது மரியாதைகள் உண்டு. அவர் பாதுகாப்புச்செயலாளராகவும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும் தன்னு டைய கடமைகளை மிக நேர்த்தியாக முன்னெடுத் துள்ளார். ஆனால் அவரால் ஜனாதிபதியினுடையகடமை களையும்பொறுப்புக்களையும் முறையாக நிறைவேற்ற முடியவில்லை அதற்குரிய இயலுமை அவரிடத்தில் இல்லைஎன்பதேஉண்மை.

இவ்வாறான நிலையில் அவர் மீண்டும் அரசியலுக்கு வருவதால் என்ன பயன்? பொதுஜன பெரமுனவினால் அவர் மீண்டும் முன்மொழி யப்படமாட்டார். பிறிதொரு கட்சியைதோற்றுவித்துஅந்த சிறிய கட்சியிலிருந்து அவர் ஜனாதிபதி பதிவிக்கு வருவது நகைப்புக்குரிய விடயமாகும் -என்றார்.

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்களின்படியும், நாட்டின்தேசியபாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையிலும்,நாட்டுமக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும் சமநிலையான சட்டத்தைக் கொண்டுவரும்நோக்கத்துடன் தற்போதுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் நீதிய மைச்சரின் தலைமையில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, இந்த புதிய சட்டம் சாதகமான மட்டத்தில் திருத்தப்பட்டுள்ளது. நமது நாட்டில் சட்டங்களைத் திருத்தவும்,புதியசட்டங்களை உருவாக்கவும் ஒரு பொறி முறைஉள்ளது.எனவேஅந்த முறைகளுக்கு ஏற்ப இந்த புதிய சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பிறகு, இந்த சட்டம்குறித்த புரிதலைநாட்டு மக்கள் அனைவரும் பெற முடியும்.

இதன்படி, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு, புதிய பயங்கரவாத எதிர்ப் புச் சட்டம் என்ற இந்த புதிய சட்டத்தை, இந்த வாரத்தி லோ அல்லது அடுத்த வாரத் திலோ விரைவாக வர்த்தமா னியில் வெளியிட எதிர்பார்க் கப்படுகிறது. அதன் பின்னர் முதலாம் வாசிப்புக்காக அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதன்படி, இந்நாட்டு மக்களுக்கு இந்த சட்டம் தொடர்பில் கருத்து வேறுபாடுகள் இருப்பின், ஒரு வாரத்திற்குள் அதை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றத்திற்கு செல்லும் வாய்ப்பும் உள்ளது.

உயர் நீதிமன்றத்திற்கு தனியான, விசாரணை நீதிமன்ற அதிகாரம் உள்ளது. அதன் பிரகாரம் உயர் நீதிமன்றம் வழங்கக்கூடிய அறிவுறுத்தல்களின்படி, மேலும் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியி ருப்பின்அதற்கும்எமதுஆட்சி தயாராகவே உள்ளது. இந்தப் புதியசட்டம்ஏற்கனவேஉள்ள சட்டத்துடன் ஒப்பிடும்போது மிகவும் முற்போக்கான புதிய விடயங்களுடனேயே திருத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முதன் முதலில் 1979ஆம் ஆண்டு ஆறு மாத காலத்திற்காக கொண்டு வரப்பட்டது. ஆனால் தொடர்ந்தும் இந்நாட்டில் பயங்கரவாதச்செயற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்றதன் காரணமாக, இன்றுவரை பயங்கரவாதத்தடுப்புச்சட்டம் என்பதுதொடர்ந்தும்அமுலில் உள்ளது. 2009 போர் நிறைவுக்கு வந்த பின்னர் இந்த சட்டம் தேவையா? எனபல்வேறுவிமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவந்ததன் காரணமாக, 2017 மற்றும் 2018 இந்தச் சட்டத்திற்குத் திருத்தங்கள கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஆனால் துரதிஷ்டவசமாக 2019 இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் காரணமாகஅந்தமுயற்சிகள் தடைப்பட்டதுடன், மீண்டும் இந்தப் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை வலுவாக அமுல்படுத்தவேண்டும்என்ற கருத்துகள் மேலோங்கின.

இருப்பினும் தொடர்ந்து வந்த காலங்களில் இந்த விடயம் தொடர்பில் மீண்டும் கலந்துரையாடல்கள் நடை பெற்றபின்னர்,பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தளர்த்து வதற்கான வேலைத் திட்டம் ஒன்றை தயாரிக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டது. 2021 செப்டெம்பரில், பொலிஸ் மா அதிபர், பயங்கரவாதச் செயல்களில் நேரடியாக ஈடுபட்டவர்களைத் தவிர வேறு யாரையும் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யக்கூடாது என்று பொலிஸ் நிலையங்களுக்கு ஒரு சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தினார். இதன்படி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை விகிதாசார அடிப்படையில் குறைந் துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், தடுப்புக் காவலில் வைத்திருக்கும் காலத்திற்கு எந்த எல்லையும் இருக்கவில்லை. ஆனால், இந்த புதிய சட்டத்தின் மூலம் 60 நாட்கள் மாத்திரமே தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க முடியும். மேலும், அவர்களைச் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட மையங் களில் மாத்திரமே தடுத்து வைக்கவும் முடியும். இந்தப் புதிய சட்டத்திற்கு ஏற்ப ஒருவரைக் கைது செய்த பிறகு, 48 மணிநேரத்திற்குள் நீதிபதியின் முன்னிலையில் ஆஜர்படுத்தி இது தொடர் பில் விவரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் யாருக்கும் வழக்குத் தொடர முடியாது. அவ்வாறு வழக்குத் தொடர வேண்டுமெனில், அது பொதுவான சட்டத்தின்படி நீதிபதியின்முன்செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலமாக இருக்கவேண்டும்.

புதிய பயங்கரவாத எதிர்ப் புச் சட்ட வரைவு தயாரிக் கப்பட்டதன் பின்னர், சட்டத் தரணிகள், சட்டத்தரணிகள் சங்கம், சர்வதேச சமூகம், சிவில் அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் என பல்வேறுபட்டவர்கள் முன் வைத்த கருத்துகள் குறித் தும் நாம் அவதானம் செலுத்தினோம்.

அதன்படி, பரிந்து ரைகளுடன் திருத்தப்பட்ட புதியசட்டம்அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கு அமைச்சரவை அங்கீகாரமும்கிடைத்துள்ளது - என்றார்.

## தொடருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையை நாம் அத்தியாவசியசேவையாகவே கருதுகின் றோம். போக்கு வரத்து அமைச்சரோ அல்லது வேறு யாரேனும் பேச்சுக்கு அழைக்கவில்லை. அவ்வாறு அழைத்தால் அதனை எம்மிடம் அறியத் தருமாறு அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கிறேன்.

வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஆட்சியாளர்களுக்குவிருப்பம் இல்லை. தொடருந்து சேவையில் 450 ஓட்டுநர்கள் இருக்கவேண்டும். ஆனால், தற்போது 280 பேர் மட்டுமே உள்ளனர் - என்றார்.

## மிரட்டுகிறது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியில் தொடருந்து சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு நடவடிக் கைகளை முன்னெடுத் துள்ளதாக தொடருந்துக் கட்டுப்பாட்டுத்திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கு அமைவாக நேற்றையதினம் கரை யோரப் பாதையில் 12 சேவைகளும், பிரதான பாதையில் 15 சேவைகளும் களனி வெளி வழியாக 4 சேவைகளும்சிலாபம்மார்க் கத்தில் 4 சேவைகளும் கொழும்புவரையில்இயக்கப் பட்டிருந்தன.

சேவைகள் குறைந்துள் ளதால் சிரமத்திற்கு உள்ளா கும்பயணிகளுக்காககாலை மற்றும் மாலை வேளை களில் 139 திட்டமிடப்பட்ட சேவைகளை முன்னெடு ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அத்திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது.

# மோடியைச் சந்திக்க ஒன்றாய் கடிதம் எழுதுவோம் வாருங்கள்

## ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு விக்கி அழைப்பு

(ந.லோகதயாளன்.)

இந்தியப் பிரதமர் மோடியை சந்திக்கும் வகை யில் ஓர் கடிதம் அனுப்ப சகல கட்சிகளின் பிரதிநிதிகளிற்கும் தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியப்பிரதமர்நரேந்திர மோடியைச் சந்திப்பதற்கும் அவருடன் கலந்துரையாட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயவுமே சகல கட்சிகளிற்கும் எழுத்தில் அழைப்பு விடுத்துள்ளார் விக்னேஸ்வரன்.

இவ்வாறு கட்சிகள் இணைந்து ஓர் கடித்த்தை தயாரித்து அனுப்பியதன் பின்னர் கூட்டகச் சென்று சந்திக்க முடியும் எனவும் அவர்நம்பிக்கைதெரிவித்துள் ளார்

## 17 இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருபடகுகள்இராமேஸ்வரம் பகுதியினையும் ஒரு படகு கோட்டைப்பட்டினத்தையும் சேர்ந்தவை எனத் தெரி விக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்ட மீன வர்கள்இன்றுயாழ்ப்பாணம் கடற்றொழில் நீரயல்வளத் திணைக்களத்தின் ஊடாக ஊர்காவற்றுறைநீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரிவுபடுத்துவதற்கான வழிகள் மற்றும் மூலோபா யங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பின் வளர்ச்சியை சுட்டிக்காட்டிய பிரதமர், தனி யார் துறையில் இந்திய முதலீடுகளை ஊக்குவிக்க இந்தியத் தலைமை நிறை வேற்று அதிகாரிகளின் முயற் சிகளுக்குநன்றிதெரிவித்தார்.

விவசாயம், சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் கல்வி ஆகியவற்றில் முதலீடு செய்வதற்கு பல வாய்ப்புகள்இருப்பதாகபிளாட் டினம்ரியாலிட்டிஇன்வெஸ்ட் மென்ட்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவபணிப்பாளரும் இலங்கை இந்திய சங்கத்தின் தலைவருமான கிஷோர் ரெட்டி தெரிவித்தார்.

இலங்கை அண்மைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருவதால், தகவல்தொழில்நுட்பம், சுற்று லாமற்றும்மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மேலதிக மாக, வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி, கனிம மணலுக் கானபெறுமதிசேர்ப்புமற்றும் விவசாய கூட்டுறவுகளின் விரிவாக்கம் ஆகியவற்றின் மூலமும் பால் மற்றும் பண்ணைவளர்ப்பு,கைத்தொ ழிற்துறையை கட்டியெழுப் புதல், தக்காளி சாறு உற்பத்தி போன்ற விவசாய உற்பத் திகளை மேற்கொள்ளுதல் போன்றபலதுறைகளில்நேரடி முதலீட்டுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதால், முதலீட்டுக்கு இதுவே நல்ல நேரம் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இருநாடுகளுக்கும்இடை யிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்திய இலங்கை சங்கத்தின் செயற்பாடுகளுக்குத் தொடர்ந்துஆதரவளித்துவரும் பிரதமருக்கு ரெட்டி நன்றி தெரிவித்தார்.

இந்தியாவின் பல நிறுவனங்களைக் கொண்ட குழுமத்தின் தலைவரான டி.எஸ். பிரகாஷ், பால், உற்பத்தி மற்றும்சேகரிப்புக்குவிவசாய கூட்டுறவு சங்கங்களைப் பயன்படுத்துவதன் மூலம், இந்தியாவின் அமுல் நிறுவ னத்தின் வெற்றியிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்வது இலங்கை தனது பால்தொழிலைவிரிவுபடுத்த உதவும் என்று கூறினார்.

பல தசாப்தங்களாக இலங்கையில் வர்த்தகம் செய்த அனுபவத்தை மேற்கோள் காட்டி, இந்திய மாநிலங்களைச் சேர்ந்த தொழில்முயற்சியாளர்கள், மிகப்பெரிய இந்திய சந்தைக் கானதயாரிப்புகளைதயாரிப் பதற்காக, இலங்கையில் முதலீடு செய்யத் தயாராக இருப்பதாகச்சுட்டிக்காட்டினர்.

1949 நிறுவப்பட்ட இலங்கை இந்திய சங்கம், பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட இலங் கையின் பழமையான மற்றும் மிகப்பெரிய நட்புறவு சங்கங்களில் ஒன்றாகும்.

## பத்தரமுல்லையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் சாமரமத்து மகளுகே தெரிவித்ததாவது:

220 பில்லியன் நிதியை கொண்ட சமுர்த்தி செய்த் திட்டத்தில் கை வைக்கவே ரணில் - ராஜபக் ஷ ஆட்சி முயற்சிகளை எடுக்கின்றது. அரசின் நிதி மற்றும் சொத் துக்கள் எங்கே, வளங்கள் எங்கே என்பதை எல்லாம் வெளிப்படையாக யாரும் அறியவில்லை. அரசும்அதை வெளிப்படுத்தத் தயாராக இல்லை.

அந்தவிடயத்தைவெளிப் படுத்தாது இருப்பதற்கு சர்வதேச நாணய நிதியத் தினுடைய பல உடன்பா டுகளை அரசு காரணமாகக் கூறிவருகிறது. எங்களுடைய நியாயமான கோரிக்கை களை ஏற்றுக்கொள்ள அரசு நடவடிக்கைஎடுக்கவேண்டும். கொள்ளையடித்த நிதியை மீண்டும் வழங்குவதற்கு ஒரு முறைமை உருவாக் கப்படவேண்டும். இந்த விடயத்தில் எந்த விட்டுக் கொடுப்புக்கும் இடமில்லை - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# கொக்குத்தொடுவாய் புதைகுழி சர்வதேச விசாரணைவேண்டும்

## சிறிதரன் எம்.பி. ஆணித்தரம்



கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்துக்கு சரியான தீர்வினைப் பெறவேண்டுமானால் சர்வதேச விசாரணை அவசியம் என நாடாளுமன்றஉறுப்பினர்சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணியைப் பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்பு அகழப்பட்ட முறைக்கும் தற்போது அகழப்படுகின்ற முறைக்கும் வித்தியாசம் இருப்பதைப் பார்க்க முடிகின்றது. எடுக்கப்பட்ட தடயப் பொருள்களை வைத்துப் பார்க்கின்ற போது நூற்றுக்குநூறு வீதம் பெண் போராளிகளுடையது என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

இறுதி யுத்தத்தின் போது கைதுசெய்யப்பட்டிருக்கின்ற காணாமல் ஆக்கப்பட்ட போராளிகளுடையதாக இருக்கும் என்பதற்கான ஆதாரமாகத்தான் இதனைப் பார்க்கின்றோம்.

கடந்த 6ஆம்திகதிஜக்கிய நாடுகள்வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில் இவ் விடயம் தொடர்பில் அண்மைக் காலமாக இவ்வாறு தமிழ் பகுதிகளில் தமிழ் இளைஞர், யுவதிகள் எலும்புக்கூடுகளாக எடுக்கப்பட்டிருக்கின்ற விடயம் தொடர்பில் எந்த வித விடயங்களும் முன் வைக்கப்படவில்லை.

54 ஆவது கூட்டத் தொடர் ஒருமாதங்களில் முடிவடைகின்ற போதாவது முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மண்ணின் விடயத்தையும் சர்வதேச சமூகம் கையிலே எடுக்கும். அதற்கு சரியான விடையை தருவதற்கு சர்வதேசரீதியான விசாரணை வேண்டும் என்பதை மிகப்பெரிய அடையாளமாக இதனைக் கருத்தில் எடுப்பார்கள் என பூரணமாக நம்புகின்றோம்.

இதற்கு சர்வதேசத்தைத் தவிர வேறு யாராலும் இதற்கு ஒரு தீர்வை எட்ட முடியாது அதனால் தான் நாங்கள் சர்வதேசசமூகத்தை நம்புகின்றோம். இறுதி யுத்தத்தின் போதும் ஐக்கிய நாடு கள் சர்வதேசத்தினுடைய நிறுவனங்கள் இந்த மண்ணிலே இருந்து மக்கள் மறிக்கும்போது விட்டு சென்றிருந்தார்கள் .

தற்போதும் அவர்களால் தான் ஒரு தீர்வை எட்ட முடியும். அதனால் தான் மீண்டும் அவர்களிடத்தே வலியுறுத்துகின்றோம். அந்தவகையில் இந்த இடத்தைப் பார்வையிட்டு எமது உறவுகள், பிள்ளைகள், குழந்தைகள் எவ்வாறு மிக மிலேட்சத்தனமாக , நாகரிக மற்ற முறையில் இலங்கை அரச பயங்கரவாதப் படைகளால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு இது மிகப்பெரிய சாட்சியாக இருக்கிறது.

இதற்கான கால மாற்றமும், சூழலும் சரியான விடையை தரும் என்ற நம்பிக்கையோடுதான் இந்த இடத்தை பார்வையிட்டு செல்கின்றோம். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# அகழ்வுப் பணிகளின்போது ஊடகங்களுக்கு அழுத்தம்

## கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளின்போது ஊடகங்கள் மீது அழுத்தங்கள்பிரயோகிக்கப்படுகின்றன எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆவணப்படுத்துவது மிகவும் அவசியமான ஒன்று. குற்ற வழக்குகளிலே இவை தான் சாட்சியம். சாட்சியத்தை பெற்று நீதிமன்றத்தின் முன்பாகவைக்கும்வரை ஆவணங்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டன என்பதிலே சிறிய தவறேதும் ஏற்பட்டால் அது குற்றவாளிகளை விடுதலை செய்வதற்கு மிகப்பெரிய அளவிலே உதவுகின்ற ஒரு விடயமாக மாறும்.

அந்தவகையிலே எந்தவிதமான ஒளிவுமறைவின்றி காத்திரமான விடயங்களைத் தேடி ஆவணப்படுத்தல் அத்தியாவசியம் என அனைவரும் எதிர்பார்க்கின்றோம்.

இன்றையதினம் புதைகுழி அகழ்வுகள் நடைபெறுகின்ற போது அதனை ஆவணப்படுத்துவதைத் தடுத்திருக்கிறார்கள்.

வேலை தொடங்க முதலும், மதியம் ஓய்வு பெறுகின்ற போதும், மாலை முடிவடைந்த போதும் படங்கள் எடுக்க அனுமதித்திருக்கிறார்களே தவிர சாட்சியங்களை சேகரிப்பதற்குரிய முறைகள் சரியாக நடைபெறுகின்றனவா? இல்லையா? என்பதை உலகத்திற்கு அதனை ஆவணப்படுத்துவதற்கு ஊடகங்களுக்கு அனுமதி கிடையாது.

புதைகுழிகள் கண்டறியப்பட்ட காலப்பகுதியில் இருந்தே கணிசமான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையிலே ஊடகங்கள் செய்திகளை வெளியே கொண்டுவந்ததால் கணிசமான அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட்டதால் தான் அக்கறை எடுக்கிற அளவிற்கு தெரிய கூடியதாக இருக்கின்றது.

இருப்பினும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பது சந்தேகத்தையும், ஏமாற்றத்தையும் கொடுக்கின்ற ஒரு விடயமாகவே இருக்கின்றது.

அகழ்வதனை பாதுகாப்பாக நீதிமன்றம் வரை ஆவணப்படுத்தி எந்த வித உடைவுகளும் இல்லாமல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பதுடன் அதே நேரம் அகழ்வு நடைபெற்றதன் பின்னர் ஆய்வு செய்யும் பணி உண்மையில் அனைத்து தரப்பினர்களும் விஷேடமாக பாதிக்கப்பட்ட தரப்புகள் நம்பிக்கையைக் கொடுக்க கூடிய வகையில் அமைய வேண்டும் என்பது முக்கியமான ஒரு கோரிக்கை. – என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# சஹ்ரானுக்கு புலனாய்வுப் பிரிவின் ஒத்துழைப்பு கிடைத்திருக்கலாம்

## ஹரீஸ் எம்.பி. சந்தேகம்



ஈஸ்டர் தாக்குதலை மேற்கொண்ட பயங்கரவாதி சஹ்ரானுக்கு, புலனாய்வுப் பிரிவினரின் ஒத்துழைப்புக்களும் அங்கீகாரமும் கிடைத்திருக்கலாம்' எனும் சந்தேகம் எழுந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கார்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்த தாக்குகளின் பின்னணியில் பெரிய சக்திகள் இருப்பதாக ஆரம்பம் முதலே கூறிவருகிறார். இந்த தாக்குகளில் முஸ்லிங்களும், கிறிஸ்தவர்களும் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலை நாட்ட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

ஜனாதிபதி எந்த பக்க சார்புமின்றி நடப்பார் என்று எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. எந்த தகுதி, தராதரமுமின்றி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். ஓய்வுபெற்ற நீதிபதிகளை கொண்டு ஜனாதிபதி நியமிக்கவுள்ள விசாரணைக்குழுவுக்கு மேலதிகமாக புலனாய்வு பிரிவின் குழுவொன்றும், சர்வதேச பொலிஸாரின் புலனாய்வு அறிக்கையும், சர்வதேச விசாரணையும் இந்த விடயம் தொடர்பில் விசாரணைக்காக நியமிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# இன்று 75 ஆவது அகவை காணும் மூத்த பத்திரிகையாளர் சலீம்

## வீரகத்தி தனபாலசிங்கம்

அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக பிராந்திய செய்தியாளர்களாக பணியாற்றிவருபவர்கள் என்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று ஒருசிலரே இருக்கிறார்கள். கிழக்கு மாகாணத்தில் அதுவும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் அத்தகைய நீண்டகால அனுபவமுடைய பத்திரிகையாளராக ஏ.எல்.எம். சலீம் அவர்களைக் குறிப்பிடமுடியும்.

தொடர்ந்தும் துடிப்புடன் பணியாற்றிவரும் அவர் இன்று 75ஆவது அகவையில் பிரவேசிக்கிறார். அவரை ஆரோக்கியத்துடன் நீடூழி வாழவும் ஊடகத்துறைக்கு மேலும் பயனுறுதியுடைய பங்களிப்பைச் செய்யவும் வாழ்த்துவோம்.

நிந்தவூரைச் சேர்ந்த சலீம் 1966 ஆம் ஆண்டு வீரகேசரியின் செய்தியாளராக பத்திரிகைத்துறையில் நுழைந்தார். பிறகு சுதந்திரன், தினகரன், தினபதி, சிந்தாமணி, தினக்குரல் என்று பல பத்திரிகைகளின் பிராந்தியச் செய்தியாளராக பணியாற்றி தனது சேவையை விரிவுபடுத்தினார். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் தினசரியின் அம்பாறை மாவட்டச் செய்தியாளராக அதன் தொடக்க காலம் முதலிருந்தே சலீம் பணியாற்றி வருகிறார். இதனிடையே, அவரின் பணியின் தரம் கண்டு சில இலத்திரனியல் ஊடகங்களும் கூட அவரது சேவையை நாடின.

இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் வளமான ஒரு மரபை விட்டுச்சென்ற புகழ்பூத்த பத்திரிகை ஆசிரியர்களான அமரர்கள் எஸ்.டி. சிவநாயகம், ஆர்.சிவகுருநாதன், கே.சிவப்பிரகாசம், ஆ.சிவனேசச்செல்வன், எஸ். நடராசா, கே.கே. இரத்தினசிங்கம், கான மயில்நாதன் ஆகியோரின் காலத்தில் அவர்களின் வழிநடத்தலில் பணியாற்றிய சலீம் இன்றைய இளம் பத்திரிகை ஆசிரியர்களின் காலத்திலும் பிராந்திய செய்தியாளராகத் தொடருகிறார். தகவல் தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சி காரணமாக பத்திரிகையாளர்களின் செயற்பாட்டு முறைகளில் நவீன கருவிகளைப் பயன்படுத்தி கடைப்பிடிக்கவேண்டியிருக்கும் மாற்றங்களுக்கு தன்னை இசைவாக்கிக் கொண்டு தங்கள் பணியை தொடர்ந்தும் செய்துவரும் தமிழ்பேசும் பத்திரிகையாளர்களில் சலீமும் ஒருவர் எனலாம்.

வெறுமனே பிராந்தியச் செய்திகளை மாத்திரம் அனுப்பும் ஒரு செய்தியாளராக மாத்திரமல்ல, அரசியல், சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்த பெருவாரியான கட்டுரைகளையும் சலீம் எழுதிவந்திருக்கிறார். பத்திரிகையாளர்களுக்கு இருக்கவேண்டிய சமூகப் பிரக்ஞையின் பால் மிகுந்த சிரத்தை காட்டி தனது பணிகளை சலீம் முன்னெடுத்து வந்திருக்கிறார்.

பிரதானமாக அம்பாறை மாவட்டத்தை தனது களமாகக் கொண்டு செயற்பட்டு வந்த போதிலும், ஊடகவியலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்களுக்காக குரல்கொடுக்கும் பல்வேறு அமைப்புக்களில் முக்கிய பங்கை வகித்த காரணத்தால் கிழக்கு மாகாணத்திற்கு அப்பால் வட மாகாணம், மலையகம் மற்றும் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் தமிழ்பேசும் ஊடகவியலாளர்கள் மத்தியில் மிகுந்த நட்புரிமை கொண்டவராக சலீம் விளங்குகிறார்.

முஸ்லிம் மீடியா ஃபோரம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆகியவற்றின் தாபக உறுப்பினரான சலீம், கிழக்கிலங்கை செய்தியாளர்கள் சங்கம், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளனம், தென்கிழக்கிலங்கை செய்தியாளர்கள் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் இருந்தார். 15 வருடங்களாக நிந்தவூர் மத்தியஸ்த சபையின் உறுப்பினராக இருந்துவரும் அவர் தற்போது நிந்தவூர் கலை இலக்கியப் பேரவையின் உப தலைவராகவும் செயற்படுகின்றார்.



சலீமின் பத்திரிகைத்துறை சேவைக்காக அவர் பல்வேறு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருக்கிறார். கலாபூஷணம் விருது (2008), இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து வருடாந்தம் வழங்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது (2017), கல்முனை மாநகர சபையின் ஊடக முதுசம் பட்டம் என்பவை அவருக்கு கிடைத்த மிகவும் குறிப்பிடத்தக்க விருதுகள்.

பத்திரிகைத்துறையில் சலீம் 50 வருடங்களைப் பூர்த்திசெய்ததை முன்னிட்டு சில வருடங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளனம் விமரிசையாகப் பெருவிழா எடுத்து அவரைக் கௌரவித்ததுடன் 'பொன்விழாக்காணும் சலீம் ' என்ற சிறப்பு மலரையும் வெளியிட்டது. அந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றி அவரைக் கௌரவப்படுத்தும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

அந்த விழாவில் தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பலரும் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த ஊடகவியலாளர்களும் சமூகப்பிரமுகர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அது தனது பத்திரிகைத்துறை வாழ்வில் சலீம் செய்த பெறுமதியான பங்களிப்புகளுக்காக சமூகம் அவர் மீது கொண்டிருந்த அபிமானத்தின் சான்றாக அமைந்தது.

சலீம் போன்ற மிகவும் நீண்டகால பிராந்திய செய்தியாளர்களின் அனுபவங்கள் இன்றைய இளம் தலைமுறை ஊடகவியலாளர்களுக்கு முன்னுதாரணமாக அமையக்கூடியவை. இன்னும் மூன்று வருடங்களில் சலீமின் பத்திரிகைத் துறை வாழ்வு ஆறு தசாப்தங்களைப் பூர்த்திசெய்யும். இந்த நீண்டகால அனுபவங்களை அவர் எழுதி நூல் வடிவில் கொண்டுவரவேண்டும். இது அவரது 75ஆவது பிறந்த தினத்தில் நான் முன்வைக்கும் கோரிக்கையாகும்.

வடபகுதியில் இன்று இருக்கக்கூடிய மிகவும் மூத்த பிராந்திய பத்திரிகையாளரான வடமராட்சி புலோலி சி. தில்லைநாதனின் 73ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த ஜூனில் இதே கோரிக்கையை நான் முன்வைத்தேன்.

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகையாளர்களிடம் பெரும்பாலும் காணப்படும் ஒரு முக்கியமான குறைபாடு அவர்கள் தங்களது சேவைக்கால அனுபவங்களின் ஊடாக ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் அரசியல், சமூக நிகழ்வுப்போக்குகளை வரலாற்றுப் பதிவாக எழுதுவதில் அக்கறை காட்டுவதில்லை என்பதாகும். எமது நண்பர் அமரர் வவுனியா மாணிக்கவாசகம் இதில் விதிவிலக்காக நடந்துகொண்ட மூத்த பத்திரிகையாளர்களுக்கு அண்மைய உதாரணமாகும்.

இன்றைய செய்தி நாளைய வரலாற்றின் அரை குறையான முதல் வரைவு என்று சொல்வார்கள். அதனால்தான் மூத்த ஊடகவியலாளர்களைப் பற்றி எழுதக்கிடைக்கும் சந்தர்ப்பங்களில் இந்த கோரிக்கையை முன்வைப்பதற்கு நான் தவறுவதில்லை.

இறுதியாக ஒரு தனிப்பட்ட குறிப்பு. எனக்கும் சலீமுக்கும் இடையிலான நட்பு கால் நூற்றாண்டுக்கும் அதிகமான நீட்சி கொண்டதாகும். கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தினக்குரல் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதல் செய்தி ஆசிரியர் என்ற வகையில் நான் கிழக்கு மாகாணத்தின் பிரதேசங்களுக்கு செய்தியாளர்களைத் தேடிக்கொண்டிருந்த போது எனக்கு அறிமுகப்படுத்தப் பட்டவர்களில் திருகோணமலையின் மூத்த பத்திரிகையாளர் சின்னையா குருநாதனும் அம்பாறை மாவட்டத்தின் சலீமும் மட்டக்களப்பின் சண். தவராசாவும் முக்கியமானவர்கள்.

அவர்கள் தினக்குரலின் பிராந்தியச் செய்தியாளர்களாக பணியாற்ற முன்வந்ததுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை, பல்வேறு பகுதிகளில் செய்தியாளர்களாக நியமிக்கப்படக்கூடியவர்களுடன் எனக்கு தொடர்புகளை ஏற்படுத்தியும் தந்தார்கள். அவர்களது உதவிகள் விரிவான பிராந்தியச் செய்தியாளர்கள் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி புதிய பத்திரிகையை குறுகிய காலத்திற்குள் பரந்தளவு வாசகர்கள் மத்தியில் கொண்டுசெல்ல எமக்கு உதவியது.

அது விடயத்தில் சலீமின் பங்களிப்பு என்றென்றைக்கும் மறக்க முடி யாதது. முதலில் அவர் முழு அம்பாறை மாவட்டத்துக்குமான தினக்குரல் செய்தியாளராக இருந்துகொண்டு பின்னர் அந்த மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் செய்தியாளர்களை தேடித்தந்தார். தினக்குரலின் ஆரம்பக் கட்ட வளர்ச்சியில் ஒரு பிராந்தியச்செய்தியாளர் என்ற வகையில் சலீமின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

நண்பர் சலீமுக்கு மீண்டும் பிறந்தநாள் வாழ்த்துக்களை கூறிக்கொண்டு அவரது பத்திரிகைத்துறைப் பணி தொடர வேண்டுகிறேன். மூத்த பத்திரிகையாளர்களை வாழும்போதே வாழ்த்துவோம்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வீண் செலவுகளைத் தவிர்ப்பதே நல்லது

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிரித்தானியாவின் சனல் –4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொலி குறித்து விசாரணை செய்வதற்காக அரசுத் தலைவர் ஆணைக்குழு ஒன்றும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றும் நியமிக்கப்படும் என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தரப்பிலிருந்து விடுக்கப்பட்ட அறிவிப்புக்கு உள்ளூரில் வரவேற்பு ஏதும் கிட்டவில்லை. இத்தகைய உள்நாட்டு விசாரணைகளில் எவருக்கும் நம்பிக்கையில்லை என்று தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் பன்னாட்டு விசாரணை ஒன்றே அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

அரசுத்தலைவரால்நியமிக்கப்படவுள்ளதாகத்தெரிவிக்கப்படும் குழுக்களின் மூலம் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்க முடியும் என்று தாம் நம்பவில்லை என்றும் இது அரசு பணத்தை வீணடிக்கும் செயல் என்றும் கத்தோலிக்கத் திருச்சபை கருத்துத் தெரிவித்துள்ளது. திருச்சபையின் பேச்சாளர் அருட் தந்தை சிறில் காமினி இந்தக் கருத்தை செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இதுபோன்ற வீண் செலவுகளை இந்த ஆட்சி தொடர்ந்து செய்கின்றது. குறிப்பாகப் பாதிக்கப்பட்டவர்களால் நிராகரிக்கப்பட்டபோதும் தொடர்ந்தும் அத்தகைய முயற்சிகளை பன்னாட்டுச் சமூகத்தின் கண்களில் மண்ணைத் தூவுவதற்கான உத்தியாக மேற்கொள்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக மட்டுமல்ல, இறுதிப் போர் தொடர்பாகவும் இந்த ஆட்சி இதுபோன்ற வேண்டாத செலவுகளுக்கான வழிவகைகளையே மேற்கொண்டுள்ளது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கிவருவதாக ஆளும் தரப்பால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதேபோன்று தேசிய ஒருமைப்பாடு மற்றும்நல்லிணக்கஆணைக்குழுஒன்றுஉருவாக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இவையும் தேவையற்ற பணச் செலுவுகளுக்கான வழிவகைகளே தவிர, இவற்றால் எந்தவொரு பயனும் இல்லை.

இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், பன்னாட்டு மனிதாபிமானச் சட்ட மீறல்கள் (போர்க்குற்றங்கள்) ஆகியவற்றை விசாரிக்க பன்னாட்டு விசாரணை ஒன்றே அவசியம் என்று இதுவிடயத்தில் பாதிக்கப்பட்டதரப்பினரானதமிழர்கள்நீண்டகாலமாகவலியுறுத்தி வருகின்றனர். உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையில் தமக்குக் கிஞ்சித்தும் நம்பிக்கையில்லை என்று அவர்கள் நிராகரித்து மிக நீண்ட நாள்களாகிவிட்டன. அப்படியிருந்தும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமிப்பேன் என்று அடம் பிடிக்கின்றது ஆளும் தரப்பு.

இதுபோன்றே பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகளையும் பாதிக்கப்பட்ட தமிழர்கள் நிராகரித்துவிட்டார்கள். ஆனால் அதுவும் தொடர்ந்தும் இயங்குகின்றது. அதற்காகவும் பெரும் தொகைப் பணம் செலவிடப்படுகின்றது. இத்தனை வருடத்தில் அந்த அலுவலகத்தின் மூலம் கிடைத்த பயன் என்னவென்றால் எதுவும் இல்லை. அந்த அலுவலகத்தில் வாக்குமூலம் கொடுத்து விசாரணைகளுக்கு ஒத்துழைப்பதற்கு மக்கள் மறுத்து வருகின்றனர்.

இதற்கு முன்னர் நல்லாட்சி என்ற பெயரிடப்பட்ட ஆட்சிக் காலத்திலும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு என்று ஒன்றே செயற்பட்டது. இந்த அமைச்சினால் வெளிநாட்டு நிதி உதவிகளுடன் பல்வேறு செயற்றிட்டங்கள் பெரும் பணச் செலவில் மேற்கொள்ளப்பட்டன. அதனால் ஏற்பட்ட பயன் என்னவென்றால், எதுவுமில்லை என்பதுதான். இருப்பினும் இப்போது தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்கப்போவதாக ஆளும் தரப்பு ஒற்றைக் காலில் நிற்கின்றது.

ஆட்சியாளர்களால்நியமிக்கப்படும்ஒவ்வொருஆணைக்குழுவும் குறைந்தபட்சம் இரண்டு முதல் மூன்று ஆண்டுகள் இயங்குகின்றன. அதற்காகப் பெருந்தொகைப் பணமும் செலவிடப்படுகின்றது. ஆனால், இறுதியில் அந்த ஆணைக்குழுக்களின் அறிக்கைகளுக்கு ஆட்சியாளர்களே மதிப்புக் கொடுப்பதில்லை. அவற்றின் பரிந்துரைகள் எவையும் செயற்படுத்தப்படுவதில்லை. காணாமற்போனோர் தொடர்வில் இதுவரையில் 6 ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அவற்றில் எவற்றின் பரிந்துரைகளும் செயற்படுத்தப்படவில்லை.

அப்படியிருக்கும்போது இந்த ஆணைக்குழுக்களுக்காகச் செலவிடப்படும் பெருந் தொகைப் பணம் நிழலுக்கு இறைத்த நீர்தானே! அதனை ஏன் செய்யவேண்டும்? அதுவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இத்தகைய வீண் செலவுகள் எதற்காக? எந்தப் பயனுமற்ற இந்தச் செலவுகளால் மக்கள் மேலும் துன்பங்களை அனுபவிப்பதைத் தவிர கிடைக்கும் பயன் ஒன்றுமில்லை.

எனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக இன்னும் ஆணைக்குழுக்களைநியமிக்கும்யோசனையைஆட்சியாளர்கள் கைவிடுவதே சிறந்தது.







## மைத்திரி – கோட்டா – ரணில் கூட்டணி

உபுல் ஜோசப் பெர்னான்டோ

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஒரு வருடத்தின் பின்னர், 2016 ஒக்டோபர் 12, இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தில் ஒரு குண்டைத் தூக்கி வீசினார். முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ , முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட உள்ளிட்ட இராணுவ அதிகாரிகளை நீதிமன்றத்தின்முன்நிறுத்தியமை தொடர்பில்அவர் தனது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினார். இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக இதற்கு முன்னர் தான் வாயை மூடிக்கொண்டிருந்தாலும், இப்போது நல்லாட்சி ஆளும் தரப்பின் நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டி வந்திருக்கிறது என்றார். இதன் மூலம் நல்லாட்சி என்ற பெயரில் தானும் ரணில் விக்கிரமசிங்கவும் சேர்ந்து அமைத்த ஆட்சி தகர்படப் போகிறது என்பதை அவர் மறைமுகமாகக் கோடிகாட்டினார்.

மைத்திரி போட்ட இந்த வெடிகுண்டால்நசுக்கப்பட்டது பிரதமர் ரணிலும், ஐ.தே.கவும்தான். ரணில் உடனடியாக ஐ.தே.க. அமைச்சர்களை அழைத்து இது குறித்து ஆலோசித்தார். அப்போதைய இராணுவப் புலனாய்வுத்துறைப்பொறுப்பதிகாரியான சுரேஷ் சாலே வழங்கிய அறிக்கையால் கோபடைந்தே மைத் திரி இவ்வாறு உரையாற்றியிருக்கிறார் என்று ரணில் கருதினார். ஆளும் தரப்பால் இராணுவ அதிகாரிகள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அவர்கள் நீதிமன்றப் படியேற்றப்பட்டதன் விளைவாகக் கோபமடைந்தவர்கள் வழங்கிய கருத்துக்களின் அடிப்படையில் சாலே அந்த அறிக்கையை மைத்திரிக்கு தந்திருந்தார். அப்படிக் கோபமடைந்தவர்கள் இராணுவத்துக்குள் ஆட்சிக்கு எதிரான செயற்பாட்டாளர்களாக அணிதிரளும் அபாயம் இருந்தது என்றது அந்த அறிக்கை.

இந்தச்சம்பவத்தை அடுத்து, மைத்திரியையும் ரணிலையும் ஒருவருக்கு ஒருவர் எதிரானவர்களாகத் திருப்பிவிட்டு ஆட்சியைக் கவிழ்க்க கோட்டாபய ஆதரவு இராணுவப் புலனாய்வு அதிகாரியான சுரேஷ் சாலே சதி செய்கிறார் என்று ரணிலும் அவரது அமைச்சரவை அமைச்சர்களும் அப்போது கருதினர். அதனால் அத்தகைய அதிகாரிகளை உடனடியாக நீக்குவது என்று அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டது. இந்த அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பின்னர் அது பற்றி அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அப்போதை அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன, இராணுவப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி சாலேயின் பெயரைக் குறிப்பிட்டுக் கடுமையாக விமர்சித்தார்.

''இந்த இராணுவப் புலனாய்வுத் தலைவர் யாழ்ப்பாணத்தை நிலைகுலையச் செய்கிறார். அங்கு மக்களைக் கொலை செய்யும் ஆவா குழு இராணுவப் புலனாய்வாளர்களின் உருவாக்கம்'' என்றார் ராஜித. அதன் பின்னர் பொது அமைப்பொன்றின் தலைவரான பேராசிரியர் சரத் விஜேசூரிய, இதற்கு ஒருபடி மேலே சென்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். ஜனாதிபதி மைத்திரிக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையே பிரச்சினைகளை உருவாக்கி, ஆட்சியை நிலைகுலையச் செய்கிறார் இராணுவப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி சுரேஷ் சாலே என்றார் அவர். சாலே உடனடியாக அவரது பதவியிலிருந்து விலக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்தப் பேராசிரியர் உள்ளிட்ட சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் பலர் சேர்ந்து மைத்திரியிடம் சென்று சாலே பற்றி முறையிட்டதைத் தொடர்ந்து மைத்திரி அவரை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பதவியிலிருந்து அகற்றினார்.

அப்படி அன்று பதவியிலிருந்து நீக்கும்படி ரணிலும் ஐக்கிய தேசியக் கட்சியும் வலியுறுத்திய நபர்தான் இன்று ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவின் அரச புலனாய்வுத்துறைத் தலைவர். சுரேஷ் சாலே அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டது கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர். கோட்டா மக்களால் விரட்டியடிக்கப்பட்டு அவரது இடத்திற்கு ரணில் வந்த பின்னரும் சாலே பதவியிலிருந்து அகற்றப்படவில்லை.

இப்போது சனல் 4 தொலைக்காட்சி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஒளிபரப்பிய நிகழ்ச்சியில் சாலே மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் காரணமாக அவரைப் பதவி நீக்கவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் குரல் எழுப்புகின்றன. ஆனால் அதற்கு ரணில் இன்னும் பதிலளிக்கவில்லை.

ரணிலும் மைத்திரியும் ஒரு நாணயத்தின் இரு பாக்கங்களைப் போன்றவர்கள் என்பதை இந்தச் சாலேயின் சம்பவம் தெளிவாக்குகின்றது. மைத்திரி ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளால் ஜனாதிபதியானவர். ரணிலோ பொது ஜன பெரமுனவின் வாக்குகளால் நாடாளுமன்ற உறுப்பினரானவர்களால் ஜனாதிபதியானவர். ஐ.தே.க. வாக்குகளால் ஜனாதிபதியான மைத்திரி ஐ.தே.கவையே தாக்கினார். ரணிலோ ஐ.தே.கவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சுப் பதவி வாங்குவதற்காக மைத்திரியிடம் தலைகுனிந்து, பணிந்து நடக்கவேண்டியிருந்தது. இன்று பொது ஜன பெரமுனவின் வாக் குகளாலேயே ரணில் ஜனாதிபதியாகி இருக்கிறார். ஆனாலும்கூட, ராஜபக்ஷ எவ்வளவுதான் தலைகுனிந்து பணிந்து நடந்தாலும் பொது ஜன பெரமுனவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர் அமைச்சுப் பதவி வழங்கமாட்டார். மைத்திரி, ஐ.தே.க மற்றும் ரணிலு டன் முரண்பாடுகளை உருவாக்கிமுழுநாட்டையும்சீர்குலைத்து அழிவுக்கு இட்டுச் சென்றார். இன்று ரணில் பொது ஜன பெரமுனவின் தலைவர்களுடன் முரண்பட்டு நாட்டில் இல்லாத பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றார். மைத்திரி ஜனாதிபதியான பின்னர் ஐ.தே.க வாக்குகளாலேயே தான் ஜனாதிபதியானார் என்று கூற விரும்பவில்லை. அவர் தனக்கு அணி மாறிய வாக்குகள் அதிகம் கிடைத்ததாகக் கூறினார். மேலும், அவர் ஜனாதிபதியாக பதவியேற்ற நாளில் இருந்து, அடுத்த தேர்தலில் தான் ஐக்கிய தேசியக் கட்சியின் பொது வேட்பாளராக அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்த்தார். ஆனால் அது நடக்கவில்லை. பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களின் வாக்குகளினால் ரணில் ஜனாதிபதியானர். ஆனால் ரணில் அதனைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வாக்குகளையும் தான் பெற்றார் என்று அவர் கூறுகிறார். மேலும், அவர் ஜனாதிபதியாக பதவியேற்ற நாள் முதல் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராவதற்கு முயற்சித்து வருகிறார்.

ஐ.தே.கவின் ஆதரவு தனக்குக் கிடைக்காது என்பதை உணர்ந்து. ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளவுபடுத்தச் சதி செய்தார். ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு பொதுஜன பெரமுனவின் வேட்புமனு கிடைக்காது என்பதை அறிந்த ரணில், பொதுஜன பெரமுனவை பிளவுபடுத்தச் சதி செய்கிறார். ஐக்கிய தேசியக் கட்சியை பிளவு படுத்தச் சதி செய்யும் அதேவேளையில், மஹிந்தவின் கூட்டு எதிரணியான எதிர்க்கட்சியை உடைக்க மைத்திரி அனைத்துத் தந்திரங்களையும் செய்தார். இன்று ரணில் பொது ஜன பெரமுனவை உடைக்க முயலும் அதேவேளையில் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியை உடைப்பது எப்படி என்று தனக்குத் தெரிந்த தந்திரங்களை எல்லாம் செய்து வருகிறார். ரணிலை அழிக்க மைத்திரி ரணில் மீது மத்திய வங்கியின் பிணைமுறி குற்றச்சாட்டை கொண்டு வந்தார். மைத்திரியை அழிக்க உயிர்த்த ஞாயிறு தாக்குதலைப் பயன்படுத்தினார் ரணில். மைத்திரி மீது பழி சுமத்த முயற்சித்தார். இறுதியில் மைத்திரி, ரணில் இருவருமே பிணைமுறி குற்றச்சாட்டினால் அழிந்தனர். உயிரித்த ஞாயிறு குண்டுவெடிப்பினாலும் மைத்திரி, ரணில் இருவருமே அழிக்கப்பட்டனர். பிணைமுறி மோசடிக்குக் காரணமான அர்ஜுன் மகேந்திரனை மத்திய வங்கியின் ஆளுநராக மைத்திரிபால நியமித்தார். 'ரணில் சொன்னதால் அர்ஜுன் மகேந்திரனை நியமித்தேன்' என்ற மைத்திரியின் கதையை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பாதுகாப்புச் சபைக் கூட்டத்திற்குத் தன்னை அழைக்காததால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்க முடியவில்லை என்ற ரணிலின் கதையையும் மக்கள் ஏற்கவில்லை.

மகிந்த பதவி விலகியதும் கோட்டாபய ரணிலைப் பிரதமராக நியமிப்பதாக இருந்தபோது, அது ஏற்புடையதுதானா என்று மைத்திரிக்கு நிமல் சிறிபால டி சில்வா மூலம் தகவல் அனுப்பப்பட்டது. அவர் அதனை ஏற்றுக்கொண்டார். ஏனெனில் நிமல் சிறிபாலவோ, டலஸ் அழகப்பெருமவோ பிரதமராவதை மைத்திரிபால விரும்பவில்லை, அதனால் ரணில் பிரதமராவதற்கு அவர் எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

ஆனால் ரணில் ஜனாதிபதியானவுடன் அவர் தன்னைப் பழிவாங்குவார் என்று மைத்திரி பயந்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நீதிமன்றத் தீர்ப்பு வந்தபோது, அதை வைத்து உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு ரணில் தன்னைப் பலிகடா வாக்கிவிடுவாரோ என்று மைத்திரி மேலும் அஞ்சினார். அதேபோன்று தமது ஆட்சிக்காலத்தில் பிணைமுறிக் குற்றச்சாட்டில் மைத்திரி தன்னைக் கைது செய்துவிடுவாரோ என்று ரணில் மைத்திரிக்கு பயந்திருந்தார் . இப்போது மைத்திரியின் பயம் அதிகரித்துள்ளது, அதனால் ரணிலுடன் இணையப் பார்க்கிறார். அதற்கு தயாசிறியே தடையாக உள்ளார். அதனால்தான் தயாசிறியை கட்சியிலிருந்து மைத்திரி நீக்கினார். ரணிலின் ஆட்சியில் இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள், தயாசிறியை கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து நீக்குவதற்கு மைத்திரிக்கு ஆதரவளித்தனர்.

இப்போது சனல் 4 கோட்டாபயவை நோக்கி விரலை நீட்டியுள்ள தருணத்தில் புதிய கூட்டணி ஒன்று உருவாகின்றது. அதுதான் மைத்திரி (எம்) கோட்டாபய (ஜி) ரணில் (ஆர்) கூட்டணி. ரணிலும் கோட்டாவும் ஏற்கனவே ஒரே பக்கத்தில்தான் இருக்கின்றனர். மைத்திரி மட்டும் இந்தக் கூட்டணியுடன் சேர்வதற்குத் தயாராகி வருகின்றார்.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்களால் 2019இல் கோட்டாபய ஜனாதிபதி வேட்பாளரானார். உயிர்த்த ஞாயிறு குண்டுகள் வெடிக்காமல் இருந்திருந்தால், அவர் வேட்பாளராகி இருக்க முடியாது. உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்கள் காரணமாகவே கோட்டாபய ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றார். அந்த 2019 தேர்தலின் பின்னர் மைத்திரிபால அரசியல் ரீதியில் செல்வாக்கற்றவரானார். அதே உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலால் 2020 பொதுத் தேர்தலில் ரணில் தனது கட்டுப்பணத்தைக்கூட இழந்தார்.

2022இல் கோட்டாபய மக்களுக்கு அஞ்சிப்பயந்து ஓடிப்போய் ஒளித்தபோது ரணிலுக்கு ஜனாதிபதிப் பதவியைக் கொடுத்தார். இந்த நிலையில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் மீண்டும் மேற்கிளம்பி வருவதென்பது சும்மா இல்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கவும் முடியாமல் நட்டஈடு வழங்கவும் முடியாமல் போனதற்கு மைத்திரிபாலவே பொறுப்பேற்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தபோது அவரது பக்கம் செல்ல விரும்பாத ஹெலிக்காப்டர் கூட்டணி மைத்திரியை ஒதுக்கிவிட்டது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்காக மைத்திரிபாலவுக்கு அரசியல் தண்டனை கிடைத்துள்ளது. அதே குண்டுத் தாக்குதலைத் தடுக்கத் தவறினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவும்கூட 2020 பொதுத் தேர்தலில் தண்டனை பெற்றவர். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலைத் தயார்ப்படுத்தி அரசியல் விளையாட்டாக மாற்றியவர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ 2022 மிக மோசமான தண்டனையை அனுபவித்தார். ஆனாலும் அவர்கள் எவரும் இன்னும் பாடம் கற்கவில்லை. கோட்டாவின் உதவியுடன் ரணில் ஜனாதிபதியாகி இருக்கிறார். ரணிலின் உதவியுடன் கோட்டா பாதுகாக்கப்படுகிறார். 2019இல் கோட்டாவைப் பாதுகாத்த மைத்திரி இப்போது ரணிலுடன் கூட்டுச் சேர்ந்திருக்கிறார்.

இந்தக் கூட்டணி வெற்றிபெறுமா?

அதைப் பற்றிய கணிப்புகளைச் செய்ய இன்னும் காலம் இருக்கின்றது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# சனல் 4 ஊடாக தமது இலக்கை அடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சி

## ஜயந்த சமரவீர சுட்டிக்காட்டு



இலங்கை விவகாரத்தை சர்வதேச மட்டத்தில் கொண்டு செல்ல வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பிரதான இலக்காகும்.

இதனை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல் 4 வெளியிட் டுள்ள ஆவணப்படம் ஊடாக அடைந்துகொள்ள கூட்டமைப்பினர் முயற்சிக்கிறார்கள். இதற்குஒருபோதும் இடமளிக்க முடியாது என தேசிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

எதுல்கோட்டை பகுதியில் உள்ள சுதந்திர தேசிய முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் ஊடக செயலாளராக பணி புரிந்த அன்ஷிப் அசாத் மௌலானா, முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நிாந்த டி சில்வா ஆகியோர் புகழிட கோரிக்கைக்காக சர்வதேச மட்டத்தில் நாட்டை காட்டிக் கொடுக்கிறார்கள்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள ஆவணப் படத்தை கொண்டு ஒரு தரப்பினர் ராஜபக்ஷர்களை பழிவாங்க முயற்சிக்கிறார்கள்.

ராஜபக்ஷர்களின் பலவீனமான அரச நிர்வாகம், ஊழல் மோசடி என்பனவற்றால் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் எமக்கும் ராஜபக்ஷர்கள் தொடர்பில் கடும் விமர்சனங்கள் காணப்படுகின்றன.

ராஜபக்ஷர்களைப் பழிவாங் குவதாக குறிப்பிட்டுக் கொண்டுநாட்டின்புலனாய்வு பிரிவு மற்றும் இராணு-வத்தை சர்வதேச மட்டத்தில் நெருக்கடிக்குள்ளாக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள்.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் வழங்கிய நிதிக்கு அமைவாகவே சனல் 4 ஆரம்ப காலத்தில் இருந்து இலங்கைக்கு எதிராகச் செயற்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளநிலையில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் காணொளி வெளியாகியுள்ளது.

சனல் 4 காணொளி வெளியிட்டவுடன் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றன.தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்தலைவர்இரா. சம்பந்தனும் இதனையே வலியுறுத்தியுள்ளார்.

ஆரம்பமான மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின் போது பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல் நஷீப் 'உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் குறித்து சர்வதேச பங்களிப்பு விசாரணை அவசியம்' என்பதை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைவிவகாரத்தை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பிரதான இலக்காகும்.

அதை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ளஆவணப்படம் ஊடாக அடைந்துகொள்ள கூட்டமைப்பினர் முயற்சிக்கிறார்கள் இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. - என்றார். (05)

## திருமணம் செய்து ஏமாற்றினார்

# ஆசாத் மௌலானாவின் மீது பெண் ஒருவர் வழக்கு தாக்கல்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தற்போது கருத்துக்களைதெரிவிக்கின்ற பிள்ளையான் எனப்படும் கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் சிவநேசதுரை சந்திரகாந்தனின்சகாஆஸாத் மௌலானாமீதுபெண்ஒருவர் போலியானஆவணங்களை சமர்ப்பித்து மோசடியான முறையில் தன்னை திருமணம் செய்து ஏமாற்றினார் என கல்முனை நீதிவான் நீதிமன்றில்வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டிற்கமைய செவ்வாய்க்கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில், கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம். சம்சுதீன் குறித்தபெண்தெரிவித்துள்ள குற்றச்சாட்டின் உண்மைத் தன்மைகுறித்துவிசாரணை மேற்கொண்டு மன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டதுடன்எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி வரை குறித்த வழக்கினை ஒத்தி வைத்தார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியை சேர்ந்த 35 வயது மதிக்கத்தக்க இளம்பெண் ஒருவரே தனது சகோதரர் சகிதம் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்துக்குவருகைதந்து பிள்ளையான் எனப்படும் கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர்சிவநேசதுரை சந்திரகாந்தனின் சகா ஆஸாத் மௌலானாமீதுமுறைப்பாடு மேற்கொண்டுள்ளார்.

அதில்போலியான ஆவணங்களை சமர்ப்பித்து முதல் திருமணத்தை மறைத்து தன்னை மறுமணம்செய்துள்ளார்எனவும், பின்னர் மட்டக்களப்பு தனியார் விருந்தினர் விடுதி ஒன்றுக்கு அழைத்து சென்று பல்வேறுஆசைவார்த்தைகள் கூறிஅங்குசிலநாள்கள்தங்க வைத்து குடும்பம்நடத்தினார் எனவும் பின்னர் தன்னை ஏமாற்றி தலைமறைவாகி இருப்பதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்டர்தாக்குதல்தொடர்பில் சனல் 4 ஆவணப்படத்தின் முக்கிய சாட்சியாக இந்த ஆசாத் மௌலானா தென்பட்டதன் பின்னர் சில தினங்களுக்கு முன்னர் அம்முறைப்பாட்டை மேற்கொண்டிருந்தார்.

அத்துடன், 2019.09.29 திகதி அன்று குறித்த திருமணம் அம்பாறை மாவட்டம் இறக்காமம் எனும் பகுதியில் நடைபெற்றுள்ளதுடன், வரவேற்பு உபசாரங்கள் யாவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முக்கிய விருந்தினர் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளன.

எனினும், தற்போது இறக்காமம் பள்ளிவாசல் குறித்த திருமணம் குறித்து மறுத்துள்ளதுடன், போலியாக தமது பள்ளிவாசல் ஆவணம் தயார் செய்யப்பட்டு இம்மோசடிதிருமணம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதாக விசாரணையில்தெரியவந்துள்ளது.

இலங்கை அரசியலில் கடுமையான அதிர்வுகளை ஏற்படுத்திய கடந்த 2021ஆம் ஆண்டு ஈஸ்டர் தினத்தில் நடந்த தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் சனல் 4 ஊடகம் ஆவணப்படம் ஒன்றை கடந்த 5 ஆம் திகதி வெளியிட்டது.

அதில் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஊடகப் பேச்சாளராக நீண்ட காலம் செயல்பட்ட ஹன்ஸீர் ஆசாத் மௌலானா, சனல் 4 ஆவணப் படத்தில் வெளியிட்ட தகவல்கள், இலங்கை அரசியலிலும் அதற்குவெளியிலும் கடுமையான வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருக்கிறது. (05)

# போதைப் பொருள்கள் விவகாரத்தில் உணர்வு ரீதியான செயற்பாடு தேவை

## அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணமாவட்டத்தில் போதைப்பொருள்பாவனை மற்றும் பரவலை கட்டுப் படுத்துவதற்குமாவட்டமட்டத்திலானகுழுஒன்றைஅமைத்து இணைந்தநடவடிக்கையை மேற்கொள்ளவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் உள்ளடக்கப்பட்டுள்ள குறித்த குழுவின்ஊடாகதகவல்களை பரிமாறி நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாணத்தில் புனர் வாழ்வு நிலையம்அமைப்பது தொடர்பாகவும் அவதானம் செலுத்தினார்.

இதன்போது, கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா -

போதைப் பொருள் பாவனை என்பது இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி வருகின்றமையால், அதனைக் கட்டுப் படுத்தும் முயற்சிகளில் அதிகாரிகள் உணர்வு ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

மேலும், இந்தக் கலந்துரையாடலில், யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வனவளப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகிய-வற்றின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

மேலும், சட்ட விரோத மணல் அகழ்வைக் கட்டுப் படுத்தல், ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்துவது உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில், மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், சுகாதார தரப்பினர் உட்பட்ட அரச அதிகாரிகள் மற்றுமா பொலிஸ் மற்றும் பாதுகாப்பு தரப்பினரும் கலந்து கொண்டனர். (05)

# ஆய்வு நிர்வாகக் கல்விக்காக 3 எம்.பிக்கள் லண்டன் பயணம்






லண்டன் பல்கலைக் கழகத்தில் சட்டத்துக்குப் பிந்தைய ஆய்வுக்கான நிர்வாகப் படிப்பைத் தொடர இலங்கையைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், அங்கஜன் இராமநாதன் மற்றும் மயந்த திசாநாயக்கா ஆகியோர் பிரித்தானியா சென்றுள்ளனர்.

இலங்கையில் அமுலாக்கப்படும் சட்டங்கள் சரியான முறையில் அமுல் படுத்தப்பட்டிருப்பினும்அவைமுறையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. எனவே, அந்தச் சட்டங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம்என்பதுதொடர்பிலேயே இக்கற்கை நெறி அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# ஒக்டேன் 92 பெற்றோல் இறக்குமதிக்கு ஒப்பந்தம்

இம்மாதம் 21 ஆம் திகதி முதல் 2024.01.21 வரையான 4 மாதகாலத்திற்கு ஒக்டேன் 92 வகை பெற்றோல் கப்பல்கள் 4 இனை முற்பதிவு செய்வதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களிடம் நீண்டகால ஒப்பந்தத்துக்காக விலைமனுவைக் கோரியுள்ளது.

அதற்காக 04 கம்பனிகள் விலைமனுக்களை சமர்ப்பித்துள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த பெறுகையை சிங்கப்பூர் விடோல் ஏசியா கம்பனிக்கு வழங்குவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

# சாதனையாளர்கள் கௌரவிப்பு







வவுனியா, சின்னச் சிப்பிக்குளம் தாருல் உலூம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த 'சாதனையாளர் கௌரவிப்பு விழா' கடந்த சனிக்கிழமை கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

கல்லூரி முதல்வர் அனீஸ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், சிறப்பு அதிதிகளாக வவுனியா மாவட்டச் செயலாளர் சரத் சந்திர, வலயக்கல்விப் பணிப்பாளர் அன்னமலர் சுரேந்திரன் மற்றும் சின்னச்சிப்பிக்குளம் ஜும்ஆ மஸ்ஜித்தலைவர்இம்தியாஸ் உள்ளிட்டமுக்கியஸ்தர்களும் ஊர்ப்பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர். (05)

# சர்வதேச கடல்சார் அமைப்புக்கான இலங்கையின் முதல் நிரந்தரப் பிரதிநிதியாக சரோஜா நியமனம்

சர்வதேச கடல்சார் அமைப்புக்கான இலங்கையின் முதல் நிரந்தரப்பிரதிநிதிக்கான நற்சான்றிதழை இங்கிலாந்துக்கானஇலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன சர்வதேச கடல்சார் அமைப்பின் பொதுச் செயலாளர் கிடாக் லிம்மிடம் கையளித்தார்.

செப்ரெம்பர் 08 ஆம் திகதி உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன தனது நற்சான்றிதழ்களை சமர்ப்பித்தார் என உயர் ஸ்தானிகராலயம் ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு ஒக்ரோபரில் இந்தியப் பெருங்கடல் ரிம் சங்கத்தின் தலைமைப் பதவியை இலங்கை ஏற்கவிருக்கும் நேரத்தில் சர்வதேச கடல்சார் அமைப்புக்கான அங்கீகாரம் இலங்கைக்கு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# நித்திரையில் இருந்த 4 வயதுச் சிறுமி சாவு

## ஹொரணையில் சம்பவம்

நித்திரையில் இருந்த நான்கு வயது சிறுமி திங்கட்கிழமை திடீரென உயிரிழந்துள்ளதாக ஹொரணை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரணைதிக்கேனபுர பகுதியில் வசித்து வரும் சசுகி அனன்யா செசாந்தி என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுமி வழமை போன்று தனது தாயாருடன் அறையில் உறங்கச்சென்றுள்ளதாகவும் தாய் கண்விழித்த போது சிறுமி உறங்கிக் கொண்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதன் பின்னர் சிறுமி சிறுநீர் கழித்ததைக் கண்ட தாய், சிறுமியின் உடைகளை மாற்றத் தயாரானபோது, சிறுமியின் உடல் உயிரற்ற நிலையில் இருப்பதை உணர்ந்த நிலையில் சிறுமியை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளார்.

வைத்தியர்கள்சிறுமியை பரிசோதித்த போது சிறுமி இறந்துவிட்டதாகப் பெற்றோர்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுமியின் பிரேத பரிசோதனை செவ்வாய்க்கிழமை ஹொரணை ஆதார வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வனப் பகுதியில் புதையல் தோண்டிய நால்வர் கைது

வனப்பகுதியொன்றில் புதையல் தோண்டிய நால்வர் மொரகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் 23, 43, 52 மற்றும் 55 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மடவளை, நாமல்புர பகுதியில் உள்ள வனப்பகுதிக்குள் புதையல் தோண்டும் போதே குறித்த நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடமிருந்து புதையல் தோண்ட பயன்படுத்தும் கருவிகள் உள்ளிட்ட பொருள்கள்பொலிஸாரால்மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# JAFFNA'S FIRST HOUSING & CONSTRUCTION EXHIBITION

JAFFNA
HOUSING & CONSTRUCTION
EXHIBITION
2023









## யாழ் மண்ணில் முதல் முறையாக
## யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
## கண்காட்சி 2023

FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700

கட்டிட நிர்மாணம், வீடமைப்பு
மற்றும் வீட்டு உபகரணங்கள்
தொடர்பான அனைத்து விடயங்களும்
ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்

**15 16 17**
**SEPTEMBER**
MUTTRAWELI GROUNDS, JAFFNA

Official Sponsor: Hayleys Aventura Innovative Solutions
Organizer: Iyngaran Media Solution (Pvt) Ltd.
In Association: Chamber of Construction Industry of Sri Lanka

Radio Partner: Sooriyan FM 103.6 103.4
Print Media Partner: வீரகேசரி Since 1930
Digital Media Partner: காலைக்கதிர் Kalaikkathir

காலைக்கதிர் Kalaikkathir

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்கக்கோரி மாணவர்கள் கிளிநொச்சியில் போராட்டங்கள்





கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கோணாவில் மகா வித்தியாலத்தில் ஆசிரியர் பற்றாக் குறை தொடர்ந்தும் காணப்படுவதால் அதனை நிவர்த்தி செய்யக்கோரி மாணவர்கள் தங்களது பெற்றோர்களுடன் இணைந்து வீதியில் இறங்கி போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த போராட்டம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் பாடசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

ஆசிரியர்களை நியமிக்கும் வரை ஆசிரியர் இடம்மாற்றம் வழங்காதே, பற்றாக்குறையான ஆசிரியர்களை நியமிக்கவும் உள்ளிட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்ட இடத்துக்கு வருகை தந்த கிளிநொச்சி தெற்கு கல்வி வலய பணிமனையின் அதிகாரிகள், பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் வருகை தராதபட்சத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பொருத்தமான வளவாளர்களை நியமிப்பதாக எழுத்துமூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பின்னரே மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு வகுப்புக்களுக்குச் சென்றனர். (05)

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் தற்கொலை தடுப்பு தினம்!



உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படும் தற்கொலை தடுப்பு தினத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ எல் எம் றிபாஸின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைய கல்முனை பிராந்திய உள நலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம். ஜே. நௌபலால் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வின் ஆரம்பத்தில் பணிப்பாளர் சார்பில் பிரதி பணிப்பாளர் டாக்டர் எம்.பி. அப்துல் வாஜித் அறிமுக உரையை நிகழ்த்தி இருந்தார். குறித்த நிகழ்வில் விசேட வளவாளராகக் கலந்துகொண்ட டாக்டர் எம் ஜே நௌபல் தற்போது தற்கொலைகள் சமுதாய மட்டத்தில் அதிகரித்துச் செல்வதாகவும் இதற்கு பொருளியல் சமூகவியல் காரணிகள் துணை நிற்கின்றன எனவும் இதனை கண்டறிந்து சிறந்த உள மருத்துவத்தை வழங்கும் போது தற்கொலைகள் உள்ளிட்ட ஏனைய சமூகவியல் பிரச்சினைகளையும் தீர்க்க முடியும் என்றும் பங்குபற்றுனர்களை கேட்டுக் கொண்டதுடன் இதுதொடர்பில் பாலமுனை இடைத்தங்கள் பிரிவு முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பிலும் விளக்கமளித்தார்.

குறித்த நிகழ்வில் உரையாற்றிய பிரதி பணிப்பாளர், சமூகவட்டத்தில் ஆன்மீக கருத்துக்களை அதிகம் பரப்புவதன் ஊடாகவும் சமய நிறுவனங்களின் அனுசரணையை பெறுவதன் ஊடாகவும் தற்கொலைகளை குறைக்க முடியும் என்று தான் நம்புவதாகவும் மக்கள் தற்காலத்தில் அதிக பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகுவதால் அதிக மன உளைச்சலுக்கு ஆளாகி இருப்பதாகவும் இதனை சீர் செய்வதற்கு உள்ளூர் உணவு உற்பத்தி மற்றும் மருந்துகள் உற்பத்தி என தொழில் நுட்ப அறிவை விருத்தி செய்து செயற்பாடுகளை முன்னெடுக்க பணிப்பாளர் அதிகமான செயற்றிட்டங்களை முன்னெடுத்துவருவதாகவும் அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பணிமனையின் பிரிவு தலைவர்களும் சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் பங்குபற்றினர். (05)

## 19 வயதுடைய மாணவியை கிளிநொச்சியில் காணோம்



கிளிநொச்சி விநாயகபுரத்திலிருந்து நகரத்தில் உள்ள தனியார் கல்வி நிலையத்துக்கு சென்ற மாணவி ஒருவர் கடந்த மாதம் 5 ஆம் திகதி முதல் காணாமல் போன நிலையில் குறித்த மாணவியை பெற்றோர்கள் தேடி வருகின்றனர்.

கிளிநொச்சி விநாயகபுரத்தைச் சேர்ந்த கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தர பிரிவில் கல்வி பயின்று வந்த புவனேஸ்வரன் ஆர்த்தி என்பவர் கடந்த 05/08/2023 இல் இருந்து காணாமல் போயுள்ளார்.

பல்வேறு இடங்களில் ஒரு மாத காலமாக தேடியும் இவரை பற்றிய எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை.

இவரை பற்றிய தகவல் தெரிந்தவர்கள் அல்லது இவரை இலங்கையின் எந்தப் பிரதேசத்திலாவது கண்டவர்கள் இருந்தால் உடனடியாக 0774941522. 0772144553 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறிய தருமாறு மிக மனவருத்தத்துடன் தந்தை கேட்டுள்ளார். (05)

## வரலாற்றுச் சாதனையுடன் தேசியத்துக்கு தெரிவானது கல்முனை ஸாஹிரா கல்லூரி






இம்மாதம் 9 ஆம் திகதி மற்றும் 10 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு வெபர் உள்ளக அரங்கில் நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான கைப்பந்து போட்டியில் 17 வயதுக்குட்பட்ட பிரிவில் கல்முனை ஸாஹிரா கல்லூரி அணி 2 ஆம் இடத்தைப்பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டதுடன் 20 வயதிற்கு உட்பட்ட அணி 4 ஆம் இடத்தினையும் பெற்றுக்கொண்டது.

இந்த விளையாட்டை பாடசாலையில் அறிமுகப்படுத்தி பயிற்சி அளித்த உடற்கல்வி ஆசிரியர் எம்.வை.எம்.றகீப், மாணவர்களுக்கு பயிற்சி அளித்து அழைத்துச் சென்ற உடற்கல்வி ஆசிரியர்களான எம்.எம்.றஜீப், எச்.எம். ஜெமீன் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.எம்.ஜப்ரான் போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள், பங்கு பற்றி திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதாக கல்லூரி முதல்வர் எம்.எச். ஜாபீர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக் கிடையிலான விளையாட்டு போட்டி வரலாற்றில் முதல் முறையாக கைப்பந்து போட்டி நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும். (05)

## ஓட்டோ விபத்து; மூவர் படுகாயம்!





ஹற்றன் - பொகவந்தலாவ பிரதான வீதியின் நோர்வூட், சென்ஜோன் டிலரி பகுதியில் ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி ஐம்பது அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று (புதன்கிழமை) மதியம் 12.45 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ, மோரா தோட்டபகுதியில் இருந்து, ஹற்றனுக்கு சென்றுக்கொண்டிருந்த ஓட்டோவே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஓட்டோ சாரதி, அவரது மனைவி மற்றும் ஒன்றரை வயது குழந்தை ஆகியோர் குறித்த ஓட்டோவில் பயணித்துள்ளனர், மேற்படி சாரதிக்கு தலைப்பகுதியில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதோடு மூன்று பேரும் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். (05)

## மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு முகவரியை வழங்கும் வேலைத்திட்டம்

### ஆரம்பம் என்கிறார் பாரத் அருள்சாமி



மலையக பெருந்தோட்ட மக்களுக்கு முகவரியை வழங்கு-வதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவரும், இ.தொ.காவின் உப தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தத் திட்டத்தின் பரீட்சார்த்த நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது எனவும் அவர் கூறினார்.

ஹற்றனில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

மலையகபெருந்தோட்டப் பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சமாந்தரமாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் தற்போது உரிமைசார் விடயங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஓர் அங்கமாக பெருந்தோட்ட மக்களுக்கு முகவரி வழங்குவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள தனி வீடுகள், லயன் வீடுகள் என தோட்டப்பகுதிகளில் முகவரி இல்லாத அனைவருக்கும் முகவரி வழங்கப்படும். இதற்கான திட்டம் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது.

தற்போது இலக்கம் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றது, அப்பணி நிறைவுபெற்ற பின்னர் அனைத்துதரவுகளும் தோட்ட நிர்வாகம், கிராம அதிகாரி, அஞ்சல் மா அதிபர் ஆகியதரப்பினருக்கு அனுப்பி வைக்கப்படும். கேகாலை மாவட்டத்தில் தற்போது பரீட்சார்த்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை, இந்தியாவின் 10 ஆயிரம் வீட்டு திட்டபணிகளும் இடம்பெறும். 10 பேர்ச்சஸ் காணி ஒதுக்கீட்டுக்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. மலையக மக்களுக்காக இந்திய அரசால் அண்மையில் ஒதுக்கப்பட்ட விசேட நிதி கல்வி, சுகாதாரத்துறைகளுக்காக பயன்படுத்தப்படும்.-என்றார். (05)





## வாழ்வாதாரமாக வளர்ப்பு ஆடுகள் வழங்கி வைப்பு

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் கீழ் வசிக்கும் தேவையுடைய பயனாளிகளுக்கு விவசாய அமைச்சால் முன்னெடுக்கப்படும் வாழ்வாதார உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள சாய்ந்தமருது அரச கால்நடை வைத்திய காரியாலயத்தில் வைத்து வளர்ப்பு ஆடுகள் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது அரச கால்நடை வைத்திய அதிகாரி, பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது அரச கால்நடை வைத்திய அதிகாரி உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு ஆடுகளை பயனாளிகளுக்கு வழங்கி வைத்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சுதேச மருத்துவ சர்வதேச மாநாடும் கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சியும்







சுதேச மருத்துவம் தொடர்பான சர்வதேச மாநாடு, கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சி கடந்த 8, 9, 10 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகோடி தலைமையில் இடம்பெற்ற இந்த சர்வதேச மாநாடு, கல்வி மற்றும் வார்த்தகக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம அதிதியாக நாட்டின் பிரதமர் தினேஷ் குணவர்த்தன கலந்துகொண்டுவார்த்தகக் கண்காட்சியின் கூடத்தை திறந்து வைத்து ஆரம்பித்து வைத்தார்.

கடந்த 8, 9, 10 ஆம் திகதிகளில் இடம் பெற்ற இந்த சர்வதேச மாநாடு, கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சியில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன, கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர உள்ளிட்ட பல அரசியல்வாதிகளும், சுதேச அமைச்சின் உயரதிகாரிகள், மாகாண சுதேச மருத்துவத் திணைக்களங்களின் மாகாண ஆணையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்த சர்வதேச மாநாடு, கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சியில் 9 மாகாண சுதேச மருத்துவத் திணைக்களங்களின் காட்சிக் கூடாரங்களும், 35 ஆயுர்வேத, சித்த யுனானி மற்றும் பாரம்பரிய தனியார் நிறுவனங்ககளின் காட்சிக் கூடாரங்களும் அமைக்கப்பட்டு தங்களின் உற்பத்திப் பொருள்களைக்காட்சிப்படுத்திவிற்பனையும் செய்து வைத்தனர். ஆயுர்வேத, சித்த, யுனானி மற்றும் பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட மருத்துவப் பொருள்கள், அழகுசாதனைப் பொருள்கள், உணவுப் பொருள்கள் போன்ற பல்வேறு வகையான பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்ட அதேவேளை, அதற்கான மருத்துவ விளக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டன. குறிப்பாக, இன்றைய காலத்துக்கேற்ப நவீன முறையில் ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட அமுக்கரா, சத்துமா பிஸ்கட் வகைகள் மற்றும் வல்லாரை கேக் போன்றவற்றை கிழக்கு மாகாண சுதேச மருத்துத் திணைக்களத்தால் உடனுக்குடன் தயாரிக்கப்பட்டு மிக அழகிய வடிவில் பொதி செய்யப்பட்டு விற்பனை செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# மகாகவி பாரதியாரின் நினைவும் பரிசளிப்பும்











சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் மற்றும் சாய்ந்தமருது கமு/ஃகமு/எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயம்இணைந்துநடத்திய 'மகாகவி பாரதியார் நினைவு தினமும், பரிசளிப்பு நிகழ்வும்' சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்சானின் நெறிப்படுத்தலில் எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். ஆரிப் தலைமையில் சாய்ந்தமருது கலாசார மத்தியநிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி முன்னாள் அதிபரும், சட்டத்தரணியுமான எம்.சி.ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஆசிரியர்களுக்கு முன்மாதிரியான கற்பித்தல் முறைகள் தொடர்பிலும், பாடசாலை ஒழுக்க நெறி தொடர்பிலும், நாட்டின் தற்கால நிலைகள் பற்றியும் சிறப்புரை நிகழ்த்தினார். மகாகவி பாரதியார் நினைவு தின பிரதான உரையைசிரேஷ்ட இலக்கியவாதியும், ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரியுமான ஏ. பீர் முகம்மட் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது கமுஃகமுஃஎம்.எஸ். காரியப்பர் வித்தியாலய ஸ்தாபகஅதிபர்ஏ.எல்.ஏ. நாபீத், ஓய்வு பெற்ற மூத்த ஆசிரியர் ஏ.எம். இப்ராலெப்பை, சாய்ந்தமருது கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. எச். சபீகா, சாய்ந்தமருதுபிரதேசசெயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. பி. நௌசாத், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய அபிவிருத்தி சபை செயலாளர் அஸ்வான் எஸ் மௌலானா, பிரதி செயலாளர் யூ. எல். என்.ஹுதா உமர், சாய்ந்தமருது கமுஃகமுஃஎம்.எஸ். காரியப்பர் வித்தியாலய பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (05)

# கிழக்கு மாகாண பேரவை செயலாளர் கடமையேற்பு







கிழக்கு மாகாண பேரவைச் செயலாளராக கலாநிதி எம்.கோபாலரத்தினம் தமது கடமைகளை நேற்று (புதன்கிழமை) பொறுப்பேற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டானால் வழங்கப்பட்ட கடிதத் திற்கமைவாக பிரதம செயலாளர் ஆர்.எம்.பி. எஸ்.ரத்நாயனாவால்வழங்கி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி. மதநாயக்கா, மாகாண பிரதிப் பிரதமசெயலாளர் (நிர்வாகம்) எம்.எம்.மன்சூர், மாகாண சுதேசமருத்துவதிணைக்கள மாகாண ஆணையாளர் கலாநிதி திருமதி இ.ஶ்ரீதர், விளையாட்டு திணைக்கள மாகாண பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள மாகாண ஆணையாளர் ஐ.எம்.றிக்காஸ் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர். (05)

# உயர்தரப் பரீட்சையில் 3 ஏ சித்திபெற்ற நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி மாணவி



நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய மாணவி விஜயகுமார் டர்ஜினி உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து மாகாண மட்டத்தில் 32 ஆம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

அண்மையில் வெளியாகிய 2022 ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சையில் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய மாணவி விஜயகுமார் டர்ஜினி 3ஏ சித்திகளைப்பெற்றுபாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

நெடுந்தீவு சைவப்பிரகார வித்தியாலயத்தில் கடந்த வருடம் உயர்தரப் பரீட்சையில் 3 மாணவர்கள் பரீட்சார்த்திகளாக பரீட்சை எழுதியுள்ளனர். பரீட்சை எழுதிய மூவரும் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

அதில் ஒரு மாணவி மட்டும் 3ஏ சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். பாடசாலையில் கலைப்பீடத்தில் 3 மாணவர்களே பரீட்சார்த்திகளாக பரீட்சை எழுதியுள்ளனர்.

மிகவும் பின்தங்கிய பாடசாலை என்ற வகையில் மாணவர்கள் கலைப்பிரிவையே தெரிவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால், இம்மாணவர்கள் கலைப்பிரிவையே தெரிவு செய்துள்ளனர். எதுவிதமானவளங்களுமின்றி பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டலிலும், குடும்ப வறுமையைக் கருத்திற்கொண்டும் இந்த மாணவி கல்வி கற்று உயர்தரத்தில் 3ஏ பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் கிட்டும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

'வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு அவர்களில் தகுதியானவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்' என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிகள் நேற்று (புதன்கிழமை) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீண்ட காலமாகத் தொண்டர் ஆசிரியர்களாக சேவையாற்றுகின்றவர்களுக்கு, நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி சாதனையாளர் கௌரவிப்பு





வட மாகாண ரீதியாக இடம்பெற்ற 2023 ஆண்டுக்கான பாடசாலை ரீதியான விளையாட்டு நிகழ்வில் வெற்றி பெற்ற மன்ஃபுனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு தலைமையில்பாடசாலைமைதானத்தில் இடம்பெற்றது.

கடந்த வாரம் முழுவதும் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றவடமாகாணபாடசாலைகளுக்கான விளையாட்டுநிகழ்வில்மன்ஃபுனிதசவேரியார் ஆண்கள் கல்லூரி 80 புள்ளிகளை பெற்று ஆண்கள் பிரிவில் மன்னார் வலயத்தில் முதலாம் இடத்தையும், மாகாண ரீதியாக இரண்டாம் இடத்தை பெற்று மன்னார் வலயம் மாகாண ரீதியாக முதல் நிலையை பெற்றுக்கொள்ள வழி வகுத்திருந்தது.

இந்நிலையில் குறித்த மாகாண போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் மன்னார் வலய உதவி கல்வி பணிப்பாளர் ஞானராஜ் பங்குபற்றுதலுடன் இடம் பெற்றது. குறித்த மாகாண விளையாட்டு போட்டிகளில் மன்ஃபுனித சவேரியார் ஆண்கள்கல்லூரி 3 தங்கப்பதக்கங்களையும், 3 வெள்ளி பதக்கங்களையும், 2 வெண்கல பதக்கங்களையும், 6 நான்காம் இடங்கள், மற்றும் 2 ஐந்தாம் இடங்களை பெற்று கொண்டது. மேலும், குறித்த போட்டிகளில், 12 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான அஞ்சலோட்ட போட்டியில் மன்ஃபுனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவர்கள் புதிய மாகாண சாதனையை நிலை நாட்டியதோடு ,14 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மாணவன் ப்ரோமியன் மாகாண சாதனையை சமன் செய்திருந்தார். இந்நிலையில் வெற்றி பெற்ற மாணவர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றதுடன் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் பதக்கங்கள் மற்றும் வெற்றி கிண்ணங்களும் கையளிக்கப்பட்டன. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.09.2023இல் வெளியிடப்பெற்றது.